## பெரம்பலூர் மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

நி.மு.எண்.4274/அ1/2015, நாள்.04.11.2015

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி – பள்ளிக் கல்வித் துறை – இளநிலை உதவியாளர் நேரடி நியமனம் – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக்குழு தொகுதி–IV தேர்வு 2013–2014 தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – சார்பு.

பார்வை:
1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.45090/அ4/இ1/2014, நாள்.26.07.2014
2. சென்னை–6 தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக்குழு துணைச் செயலாளரின் கடிதம் ந.க.எண்.4407/PSD-D1/2014, நாள்.30.05.2014.
3. பெரம்பலூர் மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண். 3351/அ1/2014, நாள்.28.07.2014.
4. சம்மந்தப்பட்டப் பள்ளித் தலைமையாசிரியரிடமிருந்து பெறப்பட்ட கருத்துருக்கள்.

---------

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய தொகுதி –IV சிறப்புப் போட்டித் தேர்வு 2013–2014 தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பார்வை (1)ல் காணும் தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகளின்படியும் பார்வை (2)ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக்குழு செயலரின் கடிதத்தின்படியும் ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை (3)ல் காணும் செயல்முறைகளின்படி இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வரும் கீழ்க்காணும் பணியாளருக்கு அன்னாரின் பெயருக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் கீழ்க்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | தேர்வாணையப் பட்டியல் வரிசை எண். | பணியாளர் பெயர், பதவி மற்றும் பணியாற்றும் அலுவலகத்தின் பெயர் | பணியேற்ற நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள். |
|---|---|---|---|---|
| 1. | 823 | கி.காவேரி<br>இளநிலை உதவியாளர்,<br>அரசு உயர்நிலைப் பள்ளி,<br>நெய்குப்பை | 28.07.2014<br>பி.ப. | 29.07.2014<br>மு.ப. |

1) இவரது மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு பணிக்காலம் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படும்.

2) தகுதிகாண் பருவ காலத்தில் இவர் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும்.

3) தகுதிகாண் பருவ காலத்தில் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியில் கலந்துகொண்டு தேர்ச்சி பெற வேண்டும்.

4) தகுதிகாண் பருவ காலத்தில் இவரது பணி மற்றும் நடத்தை நியமன அலுவலருக்கு திருப்தி தரும் வகையில் இருக்க வேண்டும்.

–2–

Scanned with CamScanner

இது சார்பான பதிவுகள் சம்மந்தப்பட்ட இளநிலை உதவியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்திட சம்மந்தப்பட்டப் பள்ளித் தலைமையாசிரியர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

மாவட்டக் கல்வி அலுவலர்,
பெரம்பலூர்.

இணைப்பு – பணிப்பதிவேடு தொகுதி

பெறுநர்
சம்மந்தப்பட்ட பணியாளர் (உரிய வழியாக)

நகல் – தலைமையாசிரியர், அரசு உயர்நிலைப் பள்ளி, நெய்குப்பை

உண்மை நகல்
பெற்றுக் கொண்டேன்
19.11.15

Scanned with CamScanner